# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 121 /பேரூ/2026**
**நாள் : 05.08..026**

A. முகம்மது கனி,
பாலசமுத்திரம்,
திண்டுக்கல் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பாலசமுத்திரம் பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம். – எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலசமுத்திரம் அஞ்சல், 11, காமாட்சியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. A. முகம்மது கனி என்பவரது 04.05.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.05.2026 அன்று பெறப்பட்டு, 121/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலசமுத்திரம் அஞ்சல், 11, காமாட்சியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. A. முகம்மது கனி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 04.05.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலசமுத்திரம் பேரூராட்சியில் சுமார் 2 ஆண்டுகளுக்கு மேலாக நிர்வாக அலுவலராக பணியாற்றி வரும் திரு. M. சித்திரைக்கனி பேரூராட்சி நிர்வாக அலுவலர் அவர்கள், சர்வே எண் 871ல் அரசு பொதுப் பாதையை ஆக்கிரமிப்பாளர்களுக்கு சாதகமாக நடந்து கொள்ளும் செயல் அலுவலரின் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும்,

24.09.2025 அன்று மன்ற உறுப்பினர்களுக்கு கொடுத்த அழைப்பிதழில் ஐந்தாவது பக்கத்தில் கூறியுள்ள ரூ.34.50 இலட்சம் அரசு பொது பணத்தை வீண் விரையம் செய்வதை தடுத்து நிறுத்தவும்,

சர்வே எண். 871 அரசு பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும் பொதுப் பாதையை அனைவரும் பயன்படுத்தும் வகையில் ஏற்படுத்திக் கொடுக்கவும் உத்திரவிடக் கோரி மனு.

<u>உறுதி மொழிகள்</u>

மேலே கூறிய அனைத்து விவரங்களும் உண்மை என்றும் கீழே இதனுடன் இணைக்கும் ஆவணங்களும் எதுவும் பொய் இல்லை என்றும் உறுதியாக கூறுகிறேன்.

1) பேரூராட்சி அலுவலகம் பாலசமுத்திரம் நாள் 24.09.2025 பாலசமுத்திரம் பேரூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு கொடுத்த அழைப்பிதழ் 11 பக்கம் நகல்கள்.

2i) சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை எண். 689/2005ல் WB/MB/N, 635 முதல் 637/2005 உத்திரவிற்கிணங்க பாலசமுத்திரம் பேரூராட்சி மன்றத்தில் போடப்பட்ட தீர்மான 3 பக்க நகல்.

3) 12/07, 1991 வருவாய் துறை அதிகாரிகளால் வழங்கப்பட்ட சர்வே எண். 871ல் பாதைக்கான வரைபட நகல்.

4) 29.09.2025 கூட்டப்பொருள் எண். 6 பக்கம் எண். 219 மன்ற உறுப்பினர்கள் கூடி தீர்மானித்த தீர்மான நகல் ஒரு பக்கம் நகல்.

5) 24.10.2025 அன்று சர்வே எண். 871ல் பாதையில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்ற கோரிய மனு நகல் 4 பக்கமும், ஒப்புகை அட்டை 1 பக்கமும் ஆக மொத்தம் 5 பக்கம்.

6) 20.03.2026 அன்று அரசாணை நீதிமன்ற தீர்ப்புகளுடன் ஆக்கிரமிப்பு அகற்ற கூறி கொடுத்த மனுவின் நகல். இணைப்பு நகல் சேர்த்து ஒப்புகை அட்டையுடன் 39 பக்கம் நிழல்கள்.

<u>இணைப்பு நகல்கள் 7</u>

a) வட்டாட்சியர் அலுவலகம் பழனி, ந.க.எண். 985/10/ஆ3 நாள் 26.02.2010, சர்வே எண். 871 பாதையின் நீளம், அகலம் குறித்து வட்டாட்சியர் கெடுத்த 2 பக்கம் நகல்.

b) பாலசமுத்திரம் பேரூராட்சி ந.க.எண். 47/2015 தகவல் நாள் 29.01.2015 இரண்டு பக்க நகல்.

c) பேரூராட்சி உதவி இயக்குநர் அவர்கள் ந.க.எண். 22/2009, நாள் 25.02.2009 ஆக்கிரமிப்பு தொடர்பான ஒரு பக்கம் நகல்.

d) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், திண்டுக்கல் மண்டலம் மிகவும் அவசரம் தனி கவனம் என்ற தலைப்பில் ந.க.எண். 2087/2014/3 என்ற கடிதத்தின் 3 பக்க நகல்.

e) சென்னை உயர்நீதிமன்றம் மனு எண். 5202/1998, நாள் 14.07.2005 871 பாதையில் இஸ்லாமியர்கள் இறந்தவர் உடலை எடுத்துச் செல்ல அளித்த தீர்ப்பு நகல், 9 பக்கங்கள்.

f) சர்வே எண். 871 பாதையில் மாதிரி வரைபடம் நகல் கலரில் 1.

g) சர்வே எண். 871/862/870/863/873/872/867 ஆகிய வரைபடங்கள் இணைக்கப்பட்ட ஒரு பக்க நகல்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 15.05.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் பாலசமுத்திரம் பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. பாலசமுத்திரம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 05.06.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 358/2026/அ1-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

1) மனுதாரர், பாலசமுத்திரம் பேரூராட்சி பகுதியில் உள்ள பள்ளிவாசல் மற்றும் கன்னி பீவி தர்ஹாவின் முன்னாள் செயலாளர் ஆவார். தற்போது மனுதாரர் மேற்படி பள்ளிவாசல் மற்றும் தர்ஹா நிருவாக கமிட்டியில் எவ்வித பொறுப்பிலும் இல்லை.

2) பாலசமுத்திரம் பேரூராட்சி, பாலசமுத்திரம் கிராமம், சர்வே எண். 871 ஆனது, வருவாய்த்துறை ஆவணங்களின்படி, சர்க்கார் புறம்போக்கு என உள்ளது. மேற்படி இடமானது பேரூராட்சி எல்லையில் அமைந்திருந்ததாலும், மேற்படி இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம், 1905 மற்றும் மாண்பமை, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் வழிகாட்டுதலின்படி வழங்கப்பட்ட, சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் அவர்களின் கடிதம் ந.க.எண். 78/GPPTK/2024 நாள் 09.09.2024ன்படி, சம்பந்தப்பட்ட வருவாய் வட்டாட்சியருக்குத்தான் அதிகாரம் உள்ளது.

மேலும், முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள விவரப்படி 24.09.2025ல் கூட்ட பொருள் 6ல் தெரிவித்த விவரப்படி கூட்டப்பொருள் தயார் செய்யப்பட்டு அனுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாண்புமிகு பழனி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் அலுவலகத்தால் மேற்படி கூட்டப் பொருளை மாறுதல் (change) செய்திட தெரிவிக்கப்பட்டதன்பேரில், மேற்படி கூட்டப்பொருள் மாற்றம் செய்யப்பட்டது.

அதனடிப்படையில், பின்வரும் விவரப்படியான பணிகள் செய்திட இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 283/2025/அ1, நாள் 12.09.2025ன்படி அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

| வ.எண். | பணியின் பெயர் | நீளம் (மீட்டரில்) | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 12வது வார்டு, சர்வே எண். 50/2ல், ஆவண எண். 856/2015, நாள் 20.04.2015ன்படி, பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட மண் சாலையினை வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலையாக அமைத்தல். | 210 மீட்டர் | 34.50 |

இந்நிலையில், நாளது தேதி வரை எவ்வித நிதி ஒதுக்கீடோ, நிருவாக அனுமதியோ வரப்பெறவில்லை. எனவே, முறையீட்டு மனுதாரர் தெரிவித்த விவரப்படி அரசு பணம் விரையம்

என்ற கேள்வி எழாது என்ற விவரத்தினையும் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான பாலசமுத்திரம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 14.07.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் ஆஜராகுமாறு 29.06.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. A. முகம்மது கனி என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் 14.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- திண்டுக்கல் மாவட்டம், பாலசமுத்திரம் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 871-ல் அரசு பொது பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றாமல், ஆக்கிரமிப்பாளர்களுக்கு சாதகமாக பேரூராட்சி செயல் அலுவலர் செயல்படுகிறார்.
- முஸ்லீம் சமூகத்தைச் சார்ந்த இறந்தவர்களின் உடலை மேற்காணும் பாதையில் கொண்டு செல்லும்போது கோவில் இருப்பதால் சுமார் 2 கி.மீ. தூரத்தினைச் சுற்றி மயானத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.
- எனவே இது குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு எண். W.P. No.5202/1998 வழக்கில் 14.07.2005 நாளிட்ட தீர்ப்புரையில் மேற்காணும் பொதுப் பாதையில் எவ்வித சாதிமத சச்சரவின்றி இறந்த உடலை கொண்டு செல்லலாம் என ஆணையிட்டதற்கு எதிராக பேரூராட்சி நிர்வாகம் செயல்படுகிறது.
- எனவே மேற்காணும் பொதுப் பாதையில் ஆக்கிரமித்துள்ள ஆக்கிரமிப்புகளை குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்கள் கோரியும் செயல் அலுவலர் சரியான பதிலை அளிக்கவில்லை.
- எனவே சர்வே எண். 871-ல் அரசு பொதுப் பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் " என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான பாலசமுத்திரம் பேரூராட்சி செயல் அலுவலர் 14.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- பாலசமுத்திரம் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 871-ஆனது வருவாய்த் துறையின் ஆவணத்தின்படி அரசு புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- அரசு புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ள நிலத்தில் ஆக்கிரமிப்புகள் இருப்பின் அதனை அகற்றிட வருவாய்த் துறைக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது.
- மேற்படி இடமானது பேரூராட்சிக்குட்பட்ட எல்லையில் அமைந்திருந்தாலும், மேற்படி இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம், 1905 மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வால் வழக்கு எண். W.P.(MD) No. 19553 of 2024ல் 14.08.2024 நாளிட்ட தீர்ப்புரையில்

வழங்கப்பட்ட வழிகாட்டுதலின்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வின் அரசு வழக்கறிஞரின் கடிதம் ந.க.எண். 78/GPPTK/2024, நாள் 09.09.2024ன்படி சம்பந்தப்பட்ட வருவாய் வட்டாட்சியருக்குதான் ஆக்கிரமிப்புகளை அகற்ற அதிகாரம் உள்ளது.

- முறையீட்டு மனுதாரர் சர்வே எண். 871ல் ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 2005ன் கீழ் வழங்கிய மனுவில் கேள்விகள் மற்றும் காரணங்கள் கோரியதால் மேற்படி சட்டத்தின் கீழ் தகவல்கள் வழங்கிட வழிவகையில்லை என தெரிவிக்கப்பட்டது.
- மேலும் மனுதாரர் இன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையின்போது தனது 24.10.2025 நாளிட்ட மனுவில் சர்வே எண். 871ல் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரிய மனுவிற்கு பேரூராட்சி நிர்வாகத்தால் எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை என தெரிவித்தார்.
- மேற்படி மனுவிற்கு உரிய பதிலினை மனுதாரருக்கு ஒரு வார காலத்திற்குள் வழங்கப்படும் என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான பாலசமுத்திரம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் A. முகம்மது கனி என்பவர் திண்டுக்கல் மாவட்டம், பாலசமுத்திரம் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 871ல் அரசு பொதுப் பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை பேரூராட்சி செயல் அலுவலரால் அகற்றாமல் இருப்பதாகவும், முஸ்லீம் சமூகத்தை சார்ந்த இறந்தவர்களின் உடலை மேற்காணும் பாதையில் கொண்டு செல்லும்போது கோவில் இருப்பதால் சுமார் 2 கி.மீ. தூரத்தினை சுற்றி மயானத்துக்கு எடுத்து செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது எனவும் தெரிவித்திருப்பதை மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

மேலும் 24.09.2025 அன்று பேரூராட்சி மன்றக் கூட்ட பொருள் 6ல் 12வது வார்டு முஸ்லீம் மயானம் முதல் பாலாறு மெயின்ரோடு வரை ரூ.34.50 இலட்சம் மதிப்பீட்டில் சிறுபாலம், வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைக்க கூட்டப்பொருள் தயார் செய்யப்பட்டுள்ளது மூலம் அரசு பணம் வீண் விரையம் செய்யப்படுகிறது என தெரிவித்திருப்பதையும் மனுதாரரின் புகார் மனு மூலம் அறிய வருகிறது.

மேற்காணும் புகார் மனு தொடர்பாக, பாலசமுத்திரம் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 871-ஆனது வருவாய்த் துறையின் ஆவணப்படி அரசு புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மேற்படி இடத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம், 1905 மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வால் வழக்கு எண். W.P.(MD) No. 19553 of 2024ல் 14.08.2024 நாளிட்ட தீர்ப்புரையில் வழங்கப்பட்ட வழிகாட்டுதலின்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வின் அரசு வழக்கறிஞரின் கடிதம் ந.க.எண். 78/GPPTK/2024, நாள் 09.09.2024ன்படி சம்பந்தப்பட்ட வருவாய் வட்டாட்சியருக்குதான்

ஆக்கிரமிப்புகளை அகற்ற அதிகாரம் உள்ளது என தெரிவித்திருப்பதை பேரூராட்சி செயல் அலுவலரால் சமர்ப்பித்த வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மேலும் 12வது வார்டு சர்வே எண். 50/2ல் ஆவண எண். 856/2015, நாள் 20.04.2015ன்படி பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட மண் சாலையினை வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலையாக (210 மீட்டர்) ரூ.34.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட 12.09.2025 அன்று பாலசமுத்திரம் பேரூராட்சி மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று, உரிய கருத்துரு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு 12.09.2025 அன்று அனுப்பப்பட்டுள்ளது. அரசிடம் உரிய உத்தரவு பெற்று தொடர் நடவடிக்கை எடுக்க செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் பாலசமுத்திரம் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 871ல் ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக வருவாய்த் துறையிடம் கலந்து ஆலோசித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாலசமுத்திரம் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்துமாறும் பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. A. முகம்மது கனி,
   11, காமாட்சியம்மன் கோவில் தெரு ,
   பழனி வட்டம், பாலசமுத்திரம் அஞ்சல், திண்டுக்கல் மாவட்டம்.
2. செயல் அலுவலர்,
   பாலசமுத்திரம் பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer), (பெயரிட்ட உறையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
   சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

10/8/26
செயலாளர்
10/8/26

சென்னை–600 032